**ஜனவரி - 19**

**"உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன். நாள் முழுவதும் அது என் தியானம்." - சங் 119 : 97**

நம் தேவனின் வார்த்தையை தியானம் செய்வது கிறிஸ்தவர்களுக்குக் கிடைத்த ஓர் மிகப் பெரிய சிலாக்கியம். இருப்பினும் பெரும் அளவில் நாம் படிப்பது பிரயோஜனமற்றதாக இருக்கிறது. நாம் படிப்பதை செயலுக்கு கொண்டு வருவது கிடையாது. அப்படி கற்றவற்றை கிரியையில் நடத்திக் காட்டாமல் இருப்பது பொன்னான காலத்தை வீணாக்குவதைக் காட்டிலும் மோசமானது. தேவனுடைய ஜனங்கள் தங்களுக்குக் கிடைக்கும் ஒவ்வொரு தகுந்த வாய்ப்பையும் தேவனுடைய திட்டத்தைத் தெரிந்துகொள்ள வேண்டிய அறிவைப் பெற்றுக்கொள்ளப் பயன்படுத்த வேண்டும். அப்படி தேவனுடைய திட்டத்தைத் தெரிந்துகொள்ள எதையும் தியாகம் செய்கிற அளவிற்கு இருத்தல் வேண்டும். ஒரு தேவனின் குழந்தை இப்படிப்பட்ட தருணங்களில் தன்னுடைய சொந்தத் தேவைகளையும் வசதிகளையும் விட்டுக் கொடுக்கக் குறிப்பாக கவனமாக இருத்தல் வேண்டும். மற்றவர்களுடைய தேவைகளோ வசதிகளோ பறிபோகிற விதத்தில் நடந்து கொள்ளக்கூடாது. பிறருடைய உழைப்பில் வேதாகமத்தைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று விரும்புவது சுயநலத்திற்கு ஓர் அடையாளமாகும். தேவன் பேரில் நமக்கு உண்மையான அன்பு நம் உள்ளங்களில் குடிகொள்ளுமென்றால், அதுவே மேலானதாகக் கருதப்படும். **- Z ’99, 156 (R 2488).**

கிறிஸ்தவர்களுக்கு அளிக்கப்படும் ஓர் பாரம்பரிய விலையுயர்ந்த சொத்து, தேவனுடைய வசனமாகும். அதில் பிரமாணங்களும், கற்பனைகளும், வாக்குத்தத்தங்களும், அறிவுரைகளும், தீர்க்கதரிசனங்களும், சரித்திரங்களும், அடையாளங்களும் நிறைந்தவை. இவைகள் அவர்பேரில் நாம் கொண்டுள்ள அன்பை ஊக்குவிக்கும். ஒரு கிறிஸ்தவனுக்கு வேதம் ஒன்றே போதும். அது நமக்குக் களிப்பை ஊட்டி அவரைப்பற்றிய தியானத்தில் மூழ்கி விடும்படி செய்கிறது. வேறு எந்த ஒன்றும் இதுபோன்ற ஆனந்தத்தைக் கொடுப்பது கிடையாது. வேறு எதுவும் நமக்கு ஓர் பெருத்த ஆசிர்வாதத்தைக் கொண்டுவருவதில்லை. அவருடைய வேதத்தில் பிரியமாயிருந்து நாள் முழுவதும் அதனைத் தியானம் செய்வதால்ப் பெறும் ஆசீர்வாதங்களை வேறு எவற்றினின்றும் பெற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் இவற்றில் தேவ ஆவியும் ஜீவனும் இருக்கிறது.

**- P ’32, 198.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**யோபு 23:12; சங் 1:2;19:7-11; 40:8; 119:16,20,24,35,47,48,54,70,77,92,103,111,113, 119,127,131,140,143,159,162-167,174; எரே 15:16, லூக் 4:22; லூக் 11:28; அப் 17:11; ரோம 15:4; கொலோ 3:16; 2தீமோ 2:15; 3:15-17.**

**கோபுர வாசிப்பு : Z ’02, 265 (R 3070).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் வசனத்தைத் தியானம் செய்வதில் நான் விருப்பமுள்ளவனாயிருந்தேனா? எப்படி? ஏன்? பலன் என்ன?**